RECEIVED
1978-2-2
PERIODICALS DIVISION

பக்கங்கள் 6 விலை சதம் 40 ★

# ஈழநாடு
THE EELANAADU

மலர் 20 மாசி 11 ரபி அவ் 14 இதழ் 13
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 23-2-78

சன்சயின் சோப்
யாழ்ப்பாண பஜார்
கடைகளில் பெற்றுக்
கொள்ளலாம்.
இது ஒரு லாலா
தயாரிப்பு
லாலா சோப் தொழிற்சாலை
அச்சுவேலி

## யாழ் நகரில் நேற்று மாலை நடந்த

# இடதுசாரிகள் கூட்டம்

# குழப்பத்தில் முடிந்தது!

## கெனமன் பேசுகையில் கல்லும் செருப்பும் மேடைக்குப் பறந்தன

### வைத்திலிங்கத்துக்கு நெற்றியில் காயம்

### என். எம்., சுபசிங்கா பேசாமல் சென்றனர்

(யாழ்ப்பாணம்)

**இடதுசாரி ஐக்கியமுன்னணியினர் நேற்று யாழ்ப்பாணம் முற்றவெளி மைதானத்தில் முதல்தடவையாக நடத்திய பொதுக்கூட்டம் கூச்சல், கல்லெறி செருப்புவீச்சு போன்ற செயல்களால் ஒருமணி நேரத்திற்குள் முடிவடையவேண்டி ஏற்பட்டது.**

இந்தக்கூட்டத்தில் பேசுவதற்காக லங்கா சமசமாஜக்கட்சியின் தலைவர் டாக்டர் என். எம். பெரேரா, இடதுசாரி ஐக்கிய முன்னணித்தலைவரும் முன்னாள் கைத்தொழில் விஞ்ஞான அமைச்சருமான திரு.ரி. பி. சுபசிங்கா, மாஸ்கோசார்பு இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச்செயலாளர் திரு. பீட்டர்கெனமன் ஆகியோரும் வந்திருந்தனர்.

திரு. பீட்டர்கெனமன் பேச ஆரம்பித்த சிலநிமிடநேரங்களிலேயே குழப்பம் ஏற்பட்டுள்ளது. இக்குழப்பத்தில்வீசப்பட்ட கல்லொன்று வடபகுதியின் கம்யூனிஸ்ட் பிரமுகரான கம்யூனிஸ்ட் கட்சியின் யாழ். மாவட்டக்கிளையின் தலைவர் திரு. வைத்திலிங்கத்தின் நெற்றியில் சிறுகாயம் ஏற்படுத்தியது. அவர் தமது நெற்றியில் ஏற்பட்ட காயத்தை கைக்குட்டையால் தடவிக்கொண்டிருந்த போது அவரைமேடையிலிருந்து சிலர் இறக்கிக் கூட்டிச்சென்றனர். அப்போது வேறு சிலர் 'தோழர் இறங்கவேண்டாம், போகவேண்டாம்' என்றும் சத்தமிட்டுக் கேட்டுக்கொண்டனர்.

திரு பீட்டர் கெனமன் அரிசி விலைபற்றிப் பேசத்தொடங்கியபோது 'நீங்கள் அரசாங்கத்திலிருந்த சமயத்தில் அரிசியின் விலை ஆறுரூபாவாக இருந்ததே' என்று ஒருவர் குரல் எழுப்பியதைத் தொடர்ந்து பலர் கூச்சல் எழுப்பினர். மேடையை நோக்கிச் சிறுகற்களும் வீசப்பட்டன; செருப்புகள் சிலவும் மேடையில் வந்து விழுந்தன.

### கேள்விக்கு பதிலளிக்கத் தயார்

குழப்பத்தைச் சமாளித்துத் தங்கள் கருத்தைக் கேட்குமாறும் கேள்விகளுக்குப் பதிலளிக்கத் தயாராக இருப்பதாகவும் திரு. பீட்டர்கெனமன் கூறிய போதிலும் கூச்சலும் குழப்பமும் அடங்கவில்லை.

மேடையில் நின்ற திரு. பீட்டர் கெனமனையும் மேடையின் பின்னே ஒரு வாங்கில்அமைதியாக அமர்ந்திருந்த டாக்டர் என் எம் பெரேராவையும்,திரு ரி.பி. சுபசிங்காவையும் அவர்களது ஆதரவாளர்சிலர் பாதுகாத்து அழைத்துச்சென்றனர்.

கூட்டம் குழப்பத்தில் முடிவடையும் கட்டத்தில் ஒலிபெருக்கி, மின்சார 'வயர்கள்' இழுத்து அறுக்கப்பட்டன. இச்சமயத்தில் தூர நின்ற சிலரும் மேடையை நோக்கிக் கல்வீசினர்.

## தேர்தலின்பின் ஜனநாயகம் விசித்திரமாக செயல்படுகிறது

### — பீட்டர் கெனமன்

(வண்ணார்பண்ணை)

கடந்த பொதுத்தேர்தலின் பின் ஜனநாயகம் விசித்திரமான முறையில் நடைபெறுகிறது. பொதுத்தேர்தலில் சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கு பதினேழுலட்சம் வாக்குகள் கிடைத்தபோதும் எட்டு நாடாளுமன்ற ஆசனங்களையே கைப்பற்ற முடிந்தது. இடதுசாரிகள் ஐக்கிய முன்னணிக்கு ஐந்து லட்சம் வாக்குகள் கிடைத்தும் கூட ஒரு ஆசனத்தையும் கைப்பற்றமுடியவில்லை. ஆனால் மூன்றரை லட்சம் வாக்குகளைப் பெற்றதமிழர் விடுதலைக்கூட்டணியினர் பதினேழு ஆசனங்களைப் பிடித்துக்கொண்டனர்.

இவ்வாறு நேற்று மாலை யாழ்ப்பாணம் முற்றவெளியில் நடந்த இடதுசாரி ஐக்கிய முன்னணியினரின் கூட்டத்தில் உரையாற்றிய கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளரான திரு. பீட்டர் கெனமன்

(6 ம் பக்கம் பார்க்க)

### இன்றும் நாளையும் பாடசாலைகள் மூடப்படும்

(கொழும்பு)

நாட்டின் சகலபாடசாலைகளையும் இன்று 23-ம் திகதியும் நாளை 24-ம் திகதியும் மூடிவிடுவதென அரசாங்கம்முடிவுசெய்துள்ளது. (ம)

### இடதுசாரி தலைவர்களுடன் அமிர் பேச்சு

[யாழ்ப்பாணம்]

நேற்று யாழ்ப்பாணம் வந்த இடதுசாரி ஐக்கிய முன்னணித் தலைவர்களான திரு. பீட்டர் கெனமன், திரு ரி. பி. சுபசிங்கா, டாக்டர் என். எம். பெரேரா ஆகியோருடன் நேற்று முத்திரைச் சந்தையிலுள்ள 'யாழ். இன்' ஹோட்டலில் நடந்த நண்பகல் விருந்தின் போது தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான திரு.அ அமிர்தலிங்கமும் கலந்து கொண்டார். இடதுசாரி ஐக்கிய முன்னணியின் மூன்று தலைவர்களுடனும் திரு. அமிர்தலிங்கம் அந்தரங்கமாகப் பேசியதாகத் தெரிய வருகிறது.

### நந்தினி மீண்டும் கைது

புதுடில்லி, பெப் 22

முன்னாள் ஒரிஸா முதலமைச்சர் திருமதி நந்தினி சத்பதி இன்றுபுவனேஸ்வரியில் வைத்து பொலிசாரால் கைதுசெய்யப்பட்டார்.

டிசம்பர் 14-ம் திகதி அவர் மீது தாக்கல்செய்யப்பட்ட ஒரு வழக்குத் தொடர்பாகவே அவர்கைதுசெய்யப்பட்டார். புவனேஸ்வர் காங்கிரஸ் கமிட்டி மலர் ஒன்றுக்காக சேகரிக்கப்பட்ட பணத்தில் பெருமளவில் கையாடல்நடைபெற்றுள்ளதாக இவர்மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

நேற்று யாழ்ப்பாணம் முற்றவெளியில் நடந்த இடதுசாரி ஐக்கியமுன்னணியின் பொதுக்கூட்டம் ஆரம்பித்த ஒருமணி நேரத்துக்குள் குழப்பமடைந்தது.

கூட்டத்தைத் தொடர்ந்து நடத்த முயற்சிகள் மேற்கொண்டபோதும் கூட்ட மேடையின் முன்னால் நின்ற இளைஞர்களின் கூக்குரல் கல்லெறி போன்ற அசம்பாவிதங்களால் கூட்டத்தை நடத்த முடியாதநிலை ஏற்பட்டது.

கூட்டத்தில் குழப்பம் ஏற்

[6ம் பக்கம் பார்க்க]

## சிவாஜி இன்று நாடு திரும்புகிறார்

### தேங்காய் இன்று வருவார்

[கொழும்பு]

'பைலட் பிரேம்நாத்' படப்பிடிப்பில் கலந்து கொள்ள இலங்கை வந்துள்ள நடிகர் திலகம் சிவாஜி கணேசன் இன்று தமிழ் நாடு திரும்புகிறார். அவர் மீண்டும் சனிக்கிழமை திரும்பிவந்து படப்பிடிப்பில் கலந்து கொள்வார் என்று தெரிகின்றது.

நேற்றைய படப்பிடிப்பில் திரு. சிவாஜி கணேசன் கலந்து கொள்ளவில்லை. ஆனால் கார்கில்ஸ், ரன்முத்து ஹோட்டல், பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டபம் ஆகிய இடங்களில் நடந்த படப்பிடிப்புகளில் ஏனைய தமிழக கலைஞர்கள் கலந்து கொண்டனர். பிரேமானந்த, ஜெய்குமார், ஸ்ரீதேவி, இலங்கை நடிகர் ஏப்ரகாம் ஆகியவர்கள் கலந்து கொண்டனர்.

நடிகர் தேங்காய் சீனிவாசன் நேற்று இலங்கை வருவார் என்று எதிர்பார்க்கப்பட்ட போதிலும் அவர் வரவில்லை இன்று அவர் வருவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. [ம]

## ஆந்திராவில் எம். ஜி. ஆர்.

சென்னை, பெப். 22

தமது கட்சி ஒரு அகில இந்தியக்கட்சி என்றும் அதன் லட்சியங்கள் முழு இந்தியாவுக்கும் பொருந்தும் என்றும் அ. இ. அ. தி. மு. கழகப் பொதுச் செயலாளரும் தமிழ்நாடு முத

[6ம் பக்கம் பார்க்க]

## வரி விளம்பரம்


### விற்பனைக்கு.

விவசாயிகளின் நலன் கருதி நீமியா உரத்தின் விலை குறைக்கப்பட்டுள்ளது. 10 றுத்தல் கொண்ட பைக்கற் ஒன்றின் விலை ரூபா 5/- மட்டுமே. கூடுதல் கொள்வனவிற்கு விசேட கழிவுண்டு. மில்க்வைற். யாழ்ப்பாணம். 8555

### தேவை

அரிசி மில்லில் வேலை செய்யக்கூடியவர்கள் தேவை. நேரில் வரவும். சாந்திமில், வட்டுக்கோட்டை. 8576

பரந்தன் கிளிநொச்சிப் பகுதியில் மின்சார வசதியுள்ள ஒன்று அல்லது இரண்டு ஏக்கர் மேட்டுக்காணி தேவை. விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 8577, C/o ஈழநாடு லிமிட்டெட், யாழ்ப்பாணம். 8577

யார்க்கரு விநாயகர் தேவஸ்தானத்துக்கு சிவாசாரியர் ஒருவர் தேவை. வெள்ளி, சனி, ஞாயிறு நாட்களில் நேரில் வரவும். மனேஜர், யார்க்கரு விநாயகர் தேவஸ்தானம், கரவெட்டி. 8578

### வெற்றுச் சாக்கு விற்பனை

பண்டத்தரிப்புப் பரிஷ் ப. நோ. கூட்டுறவுச் சங்கத்திலுள்ள வெற்றுச்சாக்குகள் கொள்வனவு செய்ய விரும்புபவர்களிடருந்து கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன. திருப்பிச் செலுத்தப்படும் கட்டுப்பணம் ரூபா 250/- திருப்பிச் செலுத்தப்படாத கட்டுப்பணம் ரூபா 10/- ஆகியவை சங்கத்தில் செலுத்தி படிவங்கள் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திர முடிவுத் திகதி 27-2-1978 பிற்பகல் 4-00 மணி.

ம. யோசேப்பு,
பதில் பொதுமுகாமையாளர்.
பண்டத்தரிப்பு.
21-2-1978 8575


## 'அ. தி. மு. க. அனைத்திந்திய கட்சி'

திருப்பதி, பெப். 22

"அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஓர் அனைத்திந்தியக்கட்சியாகும்."

இவ்வாறு அ. இ. அ. தி. மு. க. பொதுச்செயலாளர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் கூறினார்.

திருப்பதியில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக்கூட்டம் ஒன்றில் பேசுகையிலேயே திரு. எம். ஜி. ஆர் கூறினார்.

அண்ணா திராவிடமுன்னேற்றக் கழகத்தின் கொள்கை இந்தியா முழுவதுக்குமானது என்றும் எம். ஜி. ஆர். கூறினார். [இ]

## வானொலி நாடகங்களில் வெளியூர் கலைஞருக்கும் வாய்ப்பளிக்க வேண்டும்

### கட்டுப்பாட்டாளரிடம் கோரிக்கை

[யாழ்ப்பாணம்]

"இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனம் ஒலிபரப்பும்தமிழ் நாடகங்களில் தலைநகருக்கு அப்பால் வசிக்கும் வெளியூர் கலைஞர்கள் தொடர்ந்தும் புறக்கணிக்கப்பட்டு வருகிறார்கள். வானொலி நாடகக்கலைஞர்கள் தெரிவிலும் தலைநகர் கலைஞர்களுக்கு சாதகமாகவும் வெளியூர் கலைஞர்களுக்கு பாதகமாகவும் பாகுபாடு காட்டப்படுகிறது. இந்த நிலையை மாற்றி வெளியூர்க் கலைஞர்களுக்கும் சந்தர்ப்பம் வழங்க நடவடிக்கை எடுக்கவும்"

இவ்வாறு கோரும் மகஜர் ஒன்றை யாழ் நாடக சம்மேளனத்தைச் சேர்ந்த பிரபல நாடக நடிகர் திரு. இராபற்குணம் இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபன தமிழ் சேவைக் கட்டுப்பாட்டாளருக்கு அனுப்பியுள்ளார்.

இம் மகஜரின் பிரதிகள் தகவல் ஒலிபரப்பு அமைச்சர் திரு. பி. விஜயதுங்கா, எதிர்க்கட்சித் தலைவர் திரு. ஏ. அமிர்தலிங்கம், நல்லூர் எம். பி. திரு. எம். சிவசிதம்பரம், ஆகியோருக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

அந்த மகஜரின் விபரம் வருமாறு:

"இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனம் ஒலிபரப்பும் நாடகங்களில் நடிப்பதற்குத் தரப்படும் வாய்ப்பு கொழும்பில் வதியும் நடிகர்களுக்கென மட்டுப்படுத்தப்பட்ட ஒரு லிமிட்டட் சொத்தாக உள்ளது.

வாய்ப்பாட்டு, வாத்தியக் கருவிக் கலைஞர்களுக்கு ஒலிபரப்பு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்கு அனைத்து இலங்கை அடிப்படையில் வாய்ப்பளிக்கப்படுகிறது.

ஆயின், இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனம் ஒலிபரப்பும் தமிழ் நாடகங்களைப் பொறுத்தமட்டில் தலைநகருக்கு அப்பால் வசிக்கும் வெளியூர்க் கலைஞர்கள் தொடர்ந்தும் புறக்கணிக்கப்பட்டே வருகிறார்கள். வானொலி நாடகக் கலைஞர்கள் தெரிவிலும் தலைநகர் கலைஞர்களுக்கு சாதகமாகவும், வெளியூர் கலைஞர்களுக்குப் பாதகமாகவும் பாகுபாடு காட்டப்படுகிறது. தொடர்ந்து இந்நிலை தொடர அனுமதிப்பதாயின் நடிகர்கள் மத்தியில் ஏற்றத்தாழ்வு உண்டாக அனுமதிப்பதாகவே அமையும். எதிலும் ஏகபோக உரிமை வரையறுக்கப்பட்ட ஒரேசாரிபாருக்கு தொடர அனுமதிக்கக்கூடாதென்பது சமூக நீதியெனில் அது வானொலி நாடக நடிகர்களுக்கும் பொருந்துவதே.

ஆகவே வெளியூர்வாசிகளான வாய்ப்பாட்டு, வாத்தியக்கருவி கலைஞர்களைத் தெரிவதற்கான பரீட்சைகளும் இடம்பெறல்வேண்டும். ஒன்றுக்குப் பொருந்துவது பிறிதொன்றுக்குப் பொருந்தாது என்ற பிடிவாதப்போக்கால் வானொலி நேயர்களும் திரும்பத்திரும்ப சாதாஅறிமுகமான குரல்களையே வானொலி நாடகங்களில் கேட்டுச் சலிப்படையவேண்டியதுதான்.

தயவுசெய்து வானொலி நடிகர்கள் தெரிவில் பழைய நடிகர்களுக்கு வாய்ப்புத் தருவதுபோல புதியவர்களுக்கும் வாய்ப்புக் கிடைக்க வசதியாக வெளியூர் நடிகர்களும் இடம் பெறப் பார்த்துக்கொள்ளுங்கள். வெளியூர் நடிகர்களைக் கொழும்புக்கு அழைத்து ஒத்திகை நடத்துவது சிரமம் என்ற ஒரேசாட்டைக் கிளிப்பிள்ளையைப்போல் திரும்பத் திரும்பத் தொலுக்கரிக்காது தற்போதைய நடைமுறை மாற்றப்பட வேண்டிய தன் அவசியத்தை உணர்ந்து நடிகர்கள் தெரிவில் புதிய புதிய மாற்றங்களைச் சேர்க்கவேண்டுகிறோம்.

மலை முகம்துவிடம் செல்ல முடியாவிட்டால்முகம்து ஆவது மலையை நோக்கிச் செல்ல வேண்டும். வானொலி நாடக ஒத்திகைகளை மாகாணத் தலைநகரங்களில் நடத்தி ஆங்கு தானே நாடகங்களையும் ஒலிப்பதிவுசெய்து கொள்ளலாம். அல்லது ஒத்திகைகளை வெளியூர்களில் நடத்திக்கொண்டு நாடக ஒலிபரப்புக்கு மட்டும் நடிகர்களை தலைநகருக்குத் தருவிக்கலாம். இதில் சிறந்த அணுகுமுறையைத் தெரிய வேண்டியது தங்கள்பொறுப்பு.

வெளியூர் நடிகர்களைப் புறக்கணிப்பதற்கு காரணங்களைக் கற்பிக்காது, இச் சிக்கலை அவிழ்க்கவும் அவர்களுக்குச் சந்தர்ப்பங்கள் வழங்கவும் உடனடியாக வழிமுறைகளைக் கண்டுபிடிக்குமாறு தங்களைப் பணிவன்புடன்வேண்டுகிறோம்

......

## இன்று பூங்காவனம்

[ஊரெழு]

இம் மாதம் 11 ம் தேதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிய ஊரெழு வீரகத்தி விநாயகர் கோவிலின் வருடாந்த உற்சவம் இன்று பகல் விசேஷ அபிஷேகமும் இரவு நாதஸ்வரதவில் வித்துவான்களின் இசை விருந்தும் "வள்ளி திருமணம்" வில்லிசை நிகழ்ச்சியும் மற்றும் இன்னிசை நிகழ்ச்சிகளும் இடம் பெறவிருக்கின்றன.

......

வட்டு. தொகுதியில்

## இலங்கை வங்கிக்கிளைகள்

[வட்டுக்கோட்டை]

காரைநகர், பண்டத்தரிப்பு ஆகிய இரு இடங்களிலும் இலங்கை வங்கிக் கிளைகளை நிறுவுவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. இத்தகவலை வட்டுக்கோட்டைத் தொகுதி தேசியஅரசுப் பேரவை உறுப்பினர் திரு. தா திருநாவுக்கரசு காரைநகரில் நடைபெற்ற அபிவிருத்தி பற்றிய ஆலோசனைக் கூட்டத்தில் தெரிவித்தார்.

## 'போட்டிகள்மூலம் தன்னம்பிக்கை ஏற்படுகிறது'

[கரணவாய்]

"மாணவர்கள் தத்தம் திறமைகளைப் பரீட்சித்துப்பார்த்து தன்னம்பிக்கை அடைவதற்கு விளையாட்டுப் போட்டிகள் உதவுகின்றன. மாணவர்கள் வளர்ந்த பின் பல்வேறு துறைகளில் ஈடுபடும்போது தமது திறமைகளை சமுதாய வளர்ச்சிக்குப் பயன்படுத்தவேண்டும். கல்வியின்முதல்நோக்கம் இளஞ்சிறார்களை நாட்டுமுன்னேற்றத்திற்கு ஏற்றவகையில் தயார்படுத்துதலாகும். இந்தவகையில் விளையாட்டுப் போட்டிகள் மாணவர்களிடையே பரந்த மனப்பான்மையையும் ஒற்றுமையுணர்வையும் வளர்க்கின்றன"

இவ்வாறு வடமாதில கல்வியதிபதி திரு. தி. மாணிக்கவாசகர் பொலிகண்டி இந்து தமிழ் கலவன் பாடசாலையின் வருடாந்த விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையில் குறிப்பிட்டார்

இவ்விளையாட்டுப் போட்டியில் பாரதி இல்லம், முதலிடத்தையும், வள்ளுவர் இல்லம் இரண்டாமிடத்தையும், நாவலர் இல்லம் மூன்றும் இடத்தையும்பெற்றன. வெற்றிபெற்றவர்களுக்கு வடமாநிலதொழிற் கல்வி அதிகாரி திரு. ஈ. வி.

[5-ம் பக்கம் பார்க்க]

## "ஆசிரியர்களுக்கு 60 வயதுவரை சேவை நீடிப்பு வழங்குக"

[யாழ்ப்பாணம்]

"ஆசிரியர்கள் மாற்றம் அடிக்கடி நிகழ்வது கல்வியைப் பெரிதும்பாதிக்கும். ஆசிரியர் இடமாற்றங்கள் வருட ஆரம்பத்தில் மட்டுமே நடைபெறுவது விரும்பத்தக்கது. பாடசாலைகளிற் சேவையாற்றப் பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் அதிகம் தேவைப்படுகின்றனர். இப்படியான சூழ்நிலையில் ஆசிரியர்கள் இடமாற்றம் நிகழ்வது மேலும் மாணவர்களது கல்வியைப் பாதிக்கும். ஆசிரியர்களுக்கு அறுபது வயதுவரை சேவைநீடிப்பு வழங்கப்படுவதுடன் அவர்களது சம்பளத்தையும் இடையீடின்றி வழங்க கல்விப் பகுதி நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கக் கோப்பாய்க் கிளையின் நிர்வாக மகாநாட்டுக்குத் தலைமைவகித்துப் பேசிய சங்கத் தலைவர் திரு. அ. பஞ்சாட்சரம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் நடைபெற்ற நிர்வாக சபையில், அறிக்கைகளைச் சமர்ப்பித்து மேற்படி சங்கச் செயலாளர் திரு. சி. சிவானந்தன் பேசுகையில், 'நாலாம்தர ஐந்தாந்தர அதிபர் பதவிகளில் உள்ள பேதங்களை நீக்கவேண்டுமென்று நமதுசங்கம் போராடி வந்திருக்கிறது. மற்றையபதவி உயர்வுக்குப் போட்டிப் பரீட்சை இல்லாமல் நாலாம் ஐந்தாம்தர அதிபர் பதவியுயர்வுக்கு மட்டும் போட்டிப் பரீட்சையை வைப்பது பொருத்தமற்றது' என்றார்.

இவ்விஷயங்கள் குறித்து திருவாளர்கள் க. மார்க்கண்டு பொ. சிவலிங்கம், செ குணசிங்கம், அ சுப்பிரமணியம் உள்ளிட்டு பலர் உரையாற்றியதையடுத்து பின்வரும் தீர்மானங்கள் நிறைவேறின.

"முதலாந் தவணை பூர்த்தியாவதற்குள் கோப்பாய்க் கிளையின் வருடாந்தப் பொதுக்கூட்டத்தைநடத்துதல்.

'சகல ஆசிரியர்களுக்கும் அறுபது வயதுவரை சேவை நீடிப்புவழங்குமாறும், நாலாம் ஐந்தாந்தர அதிபர் பதவி உயர்வுக்கான பரீட்சை முறையை இரத்துச் செய்யுமாறும், வருட ஆரம்பத்தில் மட்டும் ஆசிரியர் இடமாற்றங்களை மேற்கொள்ளுமாறும் வித்தியா பகுதியினரைத் தாம் சங்க மூலம் வேண்டுதல்' [அ]

## நாவலர் பிள்ளைத்தமிழ் அச்சிடத் தீர்மானம்

(வட்டுக்கோட்டை)

"ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் நம் இனத்தின் வழிபாட்டுக்குரியவர். அவர்பால் விளங்கிய ஆத்ம குணவிலாசங்கள் கால தேச எல்லைகளைக் கடந்து நின்று என்றும் நிலவவேண்டுபவை. அந்நோக்கில் அவரது ஆத்மகுணமூண்புகள் பிரபந்தவாரியாக அமைந்து சிறப்புற வேண்டியது- அவசியமாகும்" என்று காரைநகர் தமிழ் வளர்ச்சிக்கழக விசேஷ பொதுக் கூட்டத்தின்போது மேற்படி சங்கப் போஷகரான திரு. சு வேலானந்தஜி குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில், "ஏழாலைப் பண்டிதர் மு. கந்தையாவினால் இயற்றப்பெற்ற 'நாவலர் பிள்ளைத்தமிழ்' என்னும் நூல் நாவலர்பெருமானின் ஆத்மகுணவிலாசங்களைத் திறம்பட விளக்கும் ஒரு நூல் என்றும், தமிழ் இலக்கியச் சுவையும், சைவஞானச் சுவையும்ததும்ப அவர் குணமாண்புகளை அள்ளி வழங்கும் இந் நூலிலுள்ள பாடல்கள் படிக்கப் படிக்க இனிமை தருவன என்றும் தமிழையும், சைவசித்தாந்தத்தையும் இந்நாட்டில் வாழவைக்கும் பணியில் 'நாவலர் பிள்ளைத்தமிழுக்கும்' முக்கியமான பங்குண்டென்று இலங்கை-இந்திய அறிஞர்கள் கருதுவதனால் மேற்படி நூலை எமது கழகம் அச்சிடுவது மிகப் பொருத்தமானது எனவும் குறிப்பிட்டார்

இக்கூட்டத்தில் திரு. சு வேலானந்தஜி மேற்படி நூலின் பதிப்பாசிரியராகத் தெரிவு செய்யப்பட்டார்.

வழக்கம்போல இவ்வாண்டும் க. பொ. த. வகுப்புக்குரிய தமிழ்மொழி வினாத்தாள்களை மாதந்தோறும் அச்சிட்டு விநியோகிப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது. (அ)

## உயர்நிலைப்பள்ளியில் ஓவியர் பெனடிக்ற்

சென்னை, பெப். 22

சென்னை இராசா அண்ணாமலைபுரம், இராசா முத்தையா உயர்பள்ளி மாணவர் இலக்கிய மன்றக் கட்டிடத்தில் ஈழத்துப்பிரபல ஓவியர் திரு. ச. பெனடிக்ற் கலந்துகொண்டு 'கலைக்கல்வி' என்னும் பொருள் பற்றி உரை நிகழ்த்தினார்.

பள்ளித் தலைமைஆசிரியர் திரு. சி. சீனிவாசனின் வரவேற்புரையை அடுத்துப்பேசிய திரு. பெனடிக்ட் தமதுரையில் எழுத்துக்கள் உண்டாக ஓவியமே அடிப்படையாக உள்ளது என்றும் இலக்கியமும் ஓவியமும் நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை, சமனிலை ஆகியஒன்பான்சுவையை உடையன என்றும் வாய்ச்சுவை, கைப்பு, தித்திப்பு, புளிப்பு, உவர்ப்பு, துவர்ப்பு, கார்ப்பு ஆகிய அறுசுவையை உடையதென்று நேர்கோடுகள் நேர்மையைக் காட்டுகிறதென்றும் வரைபடங்களுடன் விளக்கிக் கூறினார்.

பள்ளித்தமிழ் ஆசிரியர் வித்துவான் பெரியசாமி (தமிழ் நாவன்) நன்றி கூறினார்.

(இ)


ஆசிரியர்கள் தேவை

**விக்டோரியாக் கல்லூரி**

**சுழிபுரம்**

பின்வரும் பாடங்களுக்கு ஆசிரியர்கள் தேவைப்படுகின்றனர்.

1. சங்கீதம். 2. நடனம்.
3 பாலர் வகுப்பு பயிற்சிபெற்ற ஆசிரியை.

தகுதியும், அனுபவமும் உள்ளவர்கள் 28-2-1978க்கு முன் விண்ணப்பிக்கவும்.

8580 அதிபர்.

ஈழநாடு
The Eelanaadu

## ஆசிரியருக்கும் ஒழுக்க நெறி!

ஆசிரியர்களுக்கான ஒழுக்க நெறிக்கோவை ஒன்றை கல்வி அமைச்சு தயாரித்துவருகிறது.

தார்மீக சமுதாயத்தை உருவாக்கவேண்டுமென்ற இலட்சியத்தைக் கொண்ட ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தன அமைச்சர்கள், எம். பிக்கள், அரசாங்க உயர் அதிகாரிகள் ஆகியோருக்கென ஏற்கனவே ஒழுக்க நெறிக்கோவையைத் தயாரித்து வெளியிட்டிருக்கிறார்.

எம். பிக்களையும் அரசாங்க உயர் அதிகாரிகளையும் ஏன் வருங்காலத் தலைவர்களையே உருவாக்குபவர்கள் ஆசிரியர்கள். அவர்கள் ஒழுக்கத்தையும் கட்டுப்பாட்டையும் கடைப்பிடித்தால்தான் பிள்ளைகள் அவர்களைப் பின்பற்ற முடியும்.

ஆசிரிய ஆசிரியைகள் சிலரின் நடத்தைகளால் இன்று ஆசிரியருக்கு ஒழுக்க நெறிக்கோவை ஒன்று அவசியம்தான் என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது.

"வசதி குறைந்த மாணவர்கள் மோசமான உடை அணிந்து பாடசாலைக்குவந்தால் அதனைச் சுட்டிக் காட்டி ஏனைய மாணவர்கள் முன்னிலையில் ஆசிரியர்கள் அவர்களை ஏசக் கூடாது."

இது ஆசிரியருக்கான ஒழுக்க நெறிக்கோவையில் வலியுறுத்தப்பட்டுள்ள ஓர் அம்சம்.

ஆசிரியர்கள் மதுபோதையில் பாடசாலைக்கு வரக் கூடாதென்றும் வகுப்பறையில் புகைத்தல் கூடாதென்றும், பாடசாலை ஆரம்பமாகும் நேரத்துக்கு முன்பாக ஆசிரியர்கள் பாடசாலைக்கு வந்துவிடவேண்டும், அனுமதி எதுவுமின்றிப் பாடசாலை முடிவடைவதற்கு முன்பாக ஆசிரியர்கள் பாடசாலையை விட்டு வெளியேறக்கூடாதென்றும் இந்த ஒழுக்க நெறிக்கோவையில் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது.

பாடசாலைக்குள் குறிப்பாக வகுப்பறைக்குள் அரசியல் பேசக்கூடாதென்றும் இதில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

மாணவர்களின் ஒழுக்கம் குறைந்துவிட்டதென்றும் மாணவர்கள் மத்தியில் கட்டுப்பாடில்லாமல்போய் விட்டதென்றும் பொதுவாகப் பலரும் குறைகூறுவதுண்டு.

ஆசிரியர்கள் சரியாக இருந்தால்தானே மாணவர்கள் ஒழுங்காக இருப்பார்கள் என்றும் பேசப்படுவது வழக்கம்.

ஆசிரியருக்கு ஒழுக்க நெறிக்கோவையைத் தயாரித்தால்மட்டும்போதாது. இந்த ஒழுக்க நெறியை அவர்கள் சரியாகக் கடைப்பிடிக்கவும்வேண்டும்.

இதுமட்டுமல்ல, பாடப்புத்தகங்களிலும் மாணவர்களினதும், ஆசிரியர்களினதும் ஒழுக்கக் கட்டுப்பாடு பெரிதும் தங்கியுள்ளதென்பதை மறந்துவிடக்கூடாது.

ஆரம்ப வகுப்புகளிலேயே நன்னெறி, வாக்குண்டாம், திருக்குறள் முதலிய நூல்களைப் படித்த படிப்பதத காலத்துக்கும் இன்று அவற்றை மறந்துவிட்டுள்ள காலத்துக்கும் உள்ள வித்தியாசத்துக்கு இந்த 'ஒழுக்க நெறிக்கோவை'யொன்றே சான்றாகும்.

# "சம உரிமைகிடைக்கும்வரை மும்மொழித் திட்டத்தை ஏற்காதீர்"

## தமிழ்ப் பெற்றோருக்கு நல்லூர் சிவா வேண்டுகோள்

[யாழ்ப்பாணம்]

"தமிழ் மொழிக்குச் சமய அந்தஸ்துக் கிடைக்கும்வரை மும்மொழித்திட்டத்தை ஏற்காதீர்."

மேற்கண்டவாறு தமிழ்ப் பெற்றோருக்கு வேண்டுகோள் விடுத்தார் நல்லூர் எம்.பி. திரு. மு. சிவசிதம்பரம் விடுத்துள்ளார். நல்லூர் கை.சி.சி. தமிழ் பெண்கள் பாடசாலை என வழங்கும் காசிப்பிள்ளை வித்தியாலயத்தில் நடைபெற்ற கட்டடத் திறப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு பேசுகையிலேயே திரு. சிவசிதம்பரம் கூட்டணி சார்பில் மேற்கண்ட வேண்டுகோளை விடுத்தார்.

இப்பாடசாலையின் குறுகிய காலவளர்ச்சியைப் பாராட்டிய திரு. சிவசிதம்பரம், மேலும் வளர்ச்சிக்குத் தம்மாலான சகல உதவிகளையும் செய்வதாகவும், இப்பாடசாலை இருக்கும் காணியை அதற்குச் சொந்தமாக்கித் தருவதாகவும் உறுதியளித்தார்.

வடமாநிலக் கல்வியதிபதி திரு. மாணிக்கவாசகர் பேசுகையில் இன்றைய சிறுவர்களே நாளைய தலைவர்கள். அன்று சிறுவர்களாக இருந்தவர்கள் தான் இன்று மக்கள் தலைவர்களாக, அறிஞர்களாக, விளங்குகிறார்கள். என்றார்.

"1975 ல் நான் வட்டாரக் கல்வி அதிகாரியாகக் கடமை யேற்ற பொழுது இப்பாடசாலை இருந்த நிலை இப்பொழுது இருக்கும் நிலை கல்வித்தரம் இவற்றுக்கு நிர்வாகம் அதிபர் பெற்றோரின் ஒத்துழைப்பே காரணம் என வட்டாரக்கல்வி அதிகாரி திரு. கு. சோமசுந்தரம் குறிப்பிட்டார்.

"1974ல் பதவி ஏற்கும் பொழுது மாணவர் கஷ்டங்களை உணர்ந்து பெற்றோர் ஆதர பெற்று கிணறு தோண்டப்பட்டது. இப்பொழுது காணி சுவீகரிக்கப்படாததால் நாம் மாற்றுந்தாய் மனோபாபத்தில் நடத்தப்படுகிறோம்" என அதிபர் திரு. பொ. நடராசா அவர்கள் கூறினார்கள்.

சங்கிலியன் மன்றத்தில் நடந்த தேநீர் விருந்தை அடுத்து சட்டநாதர் ஆலயத்திலிருந்து இராசவீதி வழியாக மங்கள வாத்தியத்துடன் திரு. மு. சிவசிதம்பரம், கல்விப் பணிப்பாளர் திரு. தி. மாணிக்கவாசகர், பிரதம கல்வி அதிகாரி பி. பொ. சிவபாதம் வட்டாரக்கல்வி அதிகாரி திரு. சோமசுந்தரம் கட்டடப் பொறியியலாளர். சிவசண்முகநாதன் ஆகியோர் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார்கள்.

பெற்றோர் ஆ. ச. செயலாளர் செ. வரதராசா வரவேற்புரை நிகழ்த்தினார். சட்டத்தரணி கனகேசவன், பாடசாலை மாணவ மாணவிகள் பாராட்டுரை வழங்கினார்கள். உப அதிபர் செ. நமசிவாயம் நன்றிதெரிவித்துப் பேசினார்.

மாணவர் கலை நிகழ்ச்சிகளும் கட்டபொம்மன் நாடகத்தில் சில காட்சிகளும் நடித்துக் காட்டப்பட்டன. [அ]

# "சுதந்திர அமைப்பில் நாம் எந்தமொழியையும்கற்கலாம்"

## காசிவாசி விழாவில் 'அமிர்'

(மாவிட்டபுரம்)

"தமிழ் மொழிக்கு இன்னல்கள், சோதனைகள் மிகுந்துவரும் இன்றைய காலகட்டத்தில் பல காசிவாசி, செந்திநாதையர்கள் தோன்ற வேண்டியது மிகவும் அவசியமாகும்"

இவ்வாறு குப்பிளான் விக்னேஸ்வரா வித்தியாசாலை மண்டபத்தில் நடந்த காசிவாசி செந்திநாதையரின் உருவப்படத் திரைநீக்கம், அவரது பணிபற்றிய நூல் வெளியீடு ஆகியவற்றில் கலந்து கொண்டு உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் கூறினார்.

வித்தியாசாலை அதிபர் திரு. க. சண்முகம் தலைமையில் நடந்த இவ்விழாவில் அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

"கடந்த 35 வருடங்களாக அரசியல் துறையில் ஈடுபட்டுத் தத்தளித்துக் கொண்டிருக்கும் எனக்குக் கடவுளை நினைக்கக்கூட நேரமில்லாமலிருக்கிறது. ஆனால் விரைவில் கரைசேர்ந்து விடலாம் என்ற நம்பிக்கையுடன் நாம் செயல்பட்டுவருகிறோம்.

தமிழ் மக்களது இன்றைய நிலையை நாம் எண்ணிப்பார்க்கும் போது காசிவாசி செந்திநாதையர் போன்றோரின் பணிகள் எம் மனக்கண்முன் தோன்றுகின்றன. இன்றைய நிலையில் அவரது பணிகள் எமது மொழியை மதத்தை காப்பாற்ற அத்தியாவசியமானவை. எமது பாடசாலைகளில் இன்று வரலாற்றுக்குப் புறம்பான தகவல்களை மாணவர்களுக்குக் கற்பித்துத் தமிழ் மக்களது பாரம்பரியங்களை வரலாறுகளை எமது மாணவர்கள் அறிய முடியாத வகையில் திட்டமிட்டு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. எல்லாவற்றிலும் மேலாக மும்மொழித்திட்டம் என்ற பெயரில் எம்மீது சிங்களம் திணிக்கப்பட இருக்கிறது. 19ம் நூற்றுண்டில் போத்துக்கேயர் எம்மை ஆக்கிரமித்தபோது 'அது தருவோம் இது தருவோம்' என்று பூச்சாண்டிகாட்டித் தமது மதத்தைப் பின்பற்றுமாறு கூறியதுபோல மும்மொழித் திட்டத்தின் மூலம் சிங்களம் கற்றால் நாம் வேலை வாய்ப்புகள், பதவி உயர்வுகள் பெறக் கூடிய நிலை உருவாகும் என இன்று கூறப்படுகிறது. வேலை வாய்ப்போ பதவி உயர்வோ எமக்கு முக்கியமல்ல. எமது உரிமைதான் எமக்கு முக்கியம். முதலில் நாமும் சுதந்திர புருஷர்கள் என்ற நிலைமை, அமைப்பு ஏற்படவேண்டும் பின்னர் எந்த மொழிகளையும் கற்கலாம். மாணவர்கள் காசிவாசி செந்திநாதையர் போன்றோரின் பணிகளை ஆராய வேண்டும். அவர்கள் ஆற்றிய தொண்டுகளை உணரவேண் அதன்படி தாமும் தொண்டாற்ற முன்வரவேண்டும். என்றார்.

மற்றும் பல்கலைக்கழக யாழ் வளாகத் தலைவர் திரு. சு. வித்தியானந்தன் சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, மானிப்பாய் எம். பி. திரு வி. தர்மலிங்கம் உட்பட பலர் பேசினர்.

காசிவாசி செந்திநாதையர் பற்றிய ஆய்வுக் கட்டுரைகளும் வாசிக்கப்பட்டன. [அ]

## மணிவாக்கு

உடுக்கத்துணியில்லாதவர்களுக்கு துணியைக் கொடுத்து, ஏன் அவர்களை அவமானப்படுத்துகிறீர்கள்? அவர்கட்கு வேலையைக் கொடுத்து துணியை வாங்குவதற்கான காசைத் தமது உழைப்பால் சம்பாதிக்கச் செய்யுங்கள்.

—மகாத்மாகாந்தி

ஆசிரியருக்குக் கடிதம்

## வானொலியின் மௌனம்!

1978 ஆகஸ்ட் செப்டெம்பர் நிகழ்வுகளை விசாரிப்பதற்கு நியமிக்கப்பட்டது போன்ற ஒருவிசாரணைக் கமிஷன் 1956 ம் 1958 ம் வருட இனக் கலவரங்களையும் விசாரித்திருந்தால் நாம் மீண்டுமொரு 1978 ஐச் சந்தித்து இருக்கவே மாட்டோம்.

சன்சோனி ஆணைக்கமிஷனை அரசு நியமித்ததே இது போன்ற இனக்கலவரங்கள் நாட்டில் மேற்கொண்டு இடம் பெறுது தவிர்ப்பதற்காகவே.

1978 ஆகஸ்ட் செப்டெம்பர் நிகழ்வுகளுக்குக் கால்கோள் இட்ட யாழ்ப்பாண நிகழ்ச்சிகளைப் பற்றிய சன்சோனி ஆணைக்கமிஷன் விசாரணைகளை பாமரமக்களும் தெரிந்து கொள்ளவேண்டியது அவசியமாகும். இப்படியான ஒரு நோக்கத்துக்காகவே அரசு ஒரு விசாரணைக் கமிஷனை அதிக பணச்செலவில் நியமித்தது. ஆயின் இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனமோ சம்பந்தப்பட்ட செய்திகளை இருட்டடிப்புச் செய்து வருகிறது. கமிஷன் விசாரணைகளை நாட்டின் பாமர மக்களும் அறிய முடியாவிட்டால் அதனால் யாருக்கும் எவ்வித உபயோகமும் இல்லாது போய்விடும்.

பொய் வதந்திகளால் உண்டாகும் கேட்டுக்கு 1977 ம் ஆண்டுச்சம்பவங்கள் சிறந்த எடுத்துக்காட்டு இந்த உண்மையை நாட்டுமக்கள் உள்ளது உள்ளபடி தெரிந்து

[5ம் பக்கம் பார்க்க]

ஈழத்தின் பிரபல நாடக நடிகரும் பண்பட்ட குணசித்திர நடிகர் என்று பெயர் பெற்றவரும் "நான் உங்கள் தோழன்" என்ற படத்தில் நடித்திருப்பவரும் மற்றும் இரண்டு ஈழத்து தமிழ்ப் படங்களில் இப்போது நடித்து வருபவருமான திரு. எஸ். லோகநாதன் நல்லதொரு கருத்தை வெளியிட்டிருக்கிறார்.

இலங்கை-இந்திய கூட்டுத் தயாரிப்பான 'பைலட் பிரேம்நாத்' படத்தில் ஈழத்து நடிகர்களுக்கு சந்தர்ப்பம் அளிப்பது குறித்து நடிகர்கள் மத்தியில் கிளப்பப்பட்டிருக்கும் பிரச்சினையையொட்டி பிரபல நாடக நடிகருமான "திப்புசுல்தான்" லோகநாதனின் கருத்தை இங்கு தருகிறேன்:

இப்படத்தில் நடிப்பது குறித்து இணை இயக்குநரான ஜோ தேவ் ஆனந் ஏற்கனவே என்னுடன் தொடர்பு கொண்டுள்ளார். பத்திரிகைகளில் வெளியான இலங்கை நடிகர்களின் பட்டியலில் எனது பெயரும் இடம்பெற்றிருக்கிறது. ஆனால் என்ன பாத்திரம் வழங்கப்படுமென்று இதுவரை என்னிடம் தொடர்பு கொள்ளப்படவில்லை. எத்தகைய பாத்திரம் அளிக்கப்பட்டாலும் அதனை எனது திறமையை வெளிக்காட்டுவதற்குரிய ஒரு வாய்ப்பாகக் கருதுவேன்;

இலங்கை-இந்திய கூட்டுத் தயாரிப்பில் ஈழத்து நடிகருக்கு மனதைத் தொடும் பாத்திரங்கள் தரப்படுமா இல்லையாஎன்று முன்கூட்டியே கவலைப்படும் நாம் ஈழத்துத் தமிழ்ப் படங்களில் மிகவும் திறமை வாய்ந்த கலைஞர்கள் எவ்வாறு இருட்டடிப்புச் செய்யப்படுகிறார்கள் என்பதையும் சிந்தித்துப் பார்க்கவேண்டும்;

திரு. எஸ். ரி. அரசு நாடகத் துறையில் மட்டுமல்ல சினிமாத் துறையிலும் பலகலை நுணுக்கங்களும் நன்கு தெரிந்த புகழ் பெற்ற கலைஞர் 'கடமையின் எல்லை' என்ற படத்தில் அவர் ஆவி உருவில்வந்து மறைந்தார். 'ராக்சி றைவர்' என்ற படத்தில் தண்டவாளத்தைக் கடப்பதோடு' அவரது நடிப்பு முடிந்தது. இந்தப் படத்தயாரிப்பாளர்களுக்கோ அல்லது ஈழத்துத் தமிழ்ப்படம் தயாரித்த ஏனையோருக்கோ 'அரசு' நன்கு தெரிந்தவராக இருந்தும் அவரது கலைத்திறன் இந்தத் தயாரிப்பாளர்களது கண்ணில் மறைபொருளாக இருந்துவருகிறது.

உள்ளூர் தயாரிப்பாளர் விவகாரமே இப்படி இருக்க இலங்கை இந்திய கூட்டுத் தயாரிப்பைப்பொறுத்தவரை முன்கூட்டியே ஊகித்துமனதை அலட்டிக்கொள்வது கலைஞர்களுக்குரிய நற்பண்பாக இருக்குமென்று நான் கருதவில்லை" என்று குறிப்பிட்டுள்ளார்.

'திப்புசுல்தான்' லோகநாதனின் கருத்து மேலேயுள்ளவை இதே சமயம் மற்றொரு சிறந்த நடிகரான 'செல்வப்பிள்ளை' பற்குணம் தெரிவித்துள்ள ஒரு கருத்து பிறிதொரு பக்கத்தில் செய்தியாக வெளியிடப்பட்டுள்ளது.

நடிப்புத்துறையிலுள்ளவர்களும் தயாரிப்பாளர்களும் மட்டுமல்ல ரசிகர்களும் இவற்றைத் தெரிந்துகொள்வது நல்லதல்லவா?

# இந்திராகாந்தி பொய் பேசி வருகிருராம்- மொரார்ஜி கவலை

ஹைதராபாத், பெப். 22 முன்னுள் இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி பொய் பேசி வருகிருர். எனவே நான் அவருடன் சர்ச்சைக்கு ஆளாக விரும்பவில்லை.

இந்தியப் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் ஹைதராபாத்தில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினர்.

திருமதி காந்தி தனது பதவிக்காலத்தில் தனி நபர் ஆட்சி நடத்தினர்.

பதவியிலிருந்து ராஜினமாச் செய்யவேண்டிய . கட்டம் வந்ததும் திருமதி காந்தி நெருக்கடி நிலையை அமுல் செய்து சர்வாதிகார ஆட்சி நடத்தினர்.

லட்சம் பேரை சிறையிலிட்ட திருமதி காந்தி தனிநபர் சுதந்திரத்தை அழித்து விட்டார் என்பதை அப்போதைய அட்டோர்ணி ஜெனரல் கூட ஒப்புக்கொண்டார்.

### ஓரளவு முன்னேற்றம்

கடந்த 30 ஆண்டு கால ஆட்சியில் இந்திய விவசாயத் துறையில் ஓரளவு அபிவிருத்தி ஏற்பட்டது என்னவோ உண்மை தான் ஆனல் அந்த அபிவிருத்தியினுல் ஏற்பட்ட பலன் மக்களுக்கு உரிய முறையில் பயன்படுத்தப்படவில்லை.

### 'ஏழ்மையை பார்த்திருக்கிருரா?"

ஜனதாக்கட்சி அரசு ஏழைகளை நசுக்கி வருகிறது என்று கூறி வரும் திருமதி காந்தி ஏழ்மையைப் பார்த்திருக்கிருரா? தமது ஆட்சிக் காலத்தில் அவர் ஏழைகளுக்காக உழைத்திருந்தால் கடந்த தேர்தலில் அவர் தோல்வியைத் தழுவியிருக்கமாட்டாரே. [இ]

## திருமண வயதெல்லை அதிகரிப்பு

புதுடில்லி, பெப். 22 இந்தியாவில் திருமண வயதெல்லை உயர்த்தப்பட உள்ளது.

இதற்கான சட்டமூலம் ஒன்று ராஜ்யசபையில் நேற்று சமர்ப்பிக்கப்பட்டது.

இச்சட்டமூலத்தின் பிரகாரம் இந்தியா முழுவதும் ஆண்களின் வயது 21 ஆகவும் பெண்களின் வயது 18 ஆக அதிகரிக்கப்பட உள்ளது. [இ]

# சைப்பிரஸ்-எகிப்திய உறவு துண்டிப்பு: அதிபர்கள் பேச்சுநடத்துவர்

நிக்கோஸியா, பெப். 22 சைப்பிரஸ்- லானுர்கா விமான நிலைய இரத்தக்களரி சம்பவத்தின் எதிரொலியாக சைப்பிரஸுடனை ராஜதந்திர உறவுகளை எகிப்து கண்டித்ததையடுத்து சைப்பிரஸ் ஜனதிபதி பிப்பியானு எகிப்திய அதிபர் ஜனுப் அனவர் சதாத்துடன் பேச்சுவார்த்தை நடத்த விருப்பம் தெரிவித்துள்ளார்

இதேவேளையில் லானுர்கா விமான நிலையத்தில் நிகழ்ந்த இரத்தக்களரிக்கு சைப்பிரஸே காரணம் என்று எகிப்திய அதிபர் ஜனுப் சதாத் குற்றம் சாட்டியுள்ளார்.

### சைப்பிரஸ் மறுப்பு

இந்தக் குற்றச்சாட்டை சைப்பிரஸ் அதிபர் கண்டிப்பாக மறுத்துள்ளார்.

இதே வேளையில் விமான நிலைய சம்பவத்தில் பலியான 15 எகிப்திய காமாண்டோக்களின் சடலங்களும் எகிப்துக்கு கொண்டுவரப்பட்டு இராணுவ மரியாதையுடன் அடக்கம் செய்யப்பட்டது. (க-இ)

## யாழ். வளாக கருத்தரங்கு

[யாழ்ப்பாணம்]

இலங்கைப் பல்கலைக் கழக யாழ். வளாகத்தின் வர்த்தக மாணவர்மன்றம் மார்ச் மாதம் 14ம் திகதி 'இலங்கையின் சுதந்திர வர்த்தக வலயம்' பற்றிய கருத்தரங்கொன்றினை இராமநாதன் மண்டபத்தில் நடாத்தவிருக்கின்றது.

யாழ்.வளாகப் பொருளியல் பேராசிரியர் கலாநிதி எஸ். ராஜரட்ணம் தலைமைவகிக்கும் இக்கருத்தரங்கில் பேராசிரியர் சோ. செல்வநாயகம் 'சுதந்திர வர்த்தக வலயமும் அதன் புவியியல் அமைவிடமும்' பற்றியும், பொருளியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் என். பாலகிருஷ்ணன் 'இலங்கையின் பொருளாதாரமும் சுதந்திர வர்த்தக வலயமும்' என்ற பொருளிலும், பொருளியல் துறை விரிவுரையாளர் மு. நித்தியானந்தன் 'சுதந்திரவர்த்தக வலயமும் தொழிலாளர்களும்' என்ற பொருளிலும் உரையாற்றுகின்றனர்.

[கா]

## யாழ். அரசாங்க அதிபர் இடமாற்றம்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் திரு.லால் விஜயபால இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

புதிய யாழ். அரசாங்க அதிபராக திரு. எம். ஈ. எல். பெர்ணன்டோ நியமிக்கப்பட்டுள்ளார்.

திரு. லால் விஜயபால, பொதுநிர்வாகம், உள்நாட்டு அலுவல்கள் அமைச்சுக்கு மாற்றம் பெற்றுள்ளார். மார்ச் மாதம் முதலாம் திகதியுடன் இங்கு பதவியேற்கும் திரு. எம். எல். பெர்ணன்டோ, பொது நிர்வாகம் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சில் சிரேஷ்ட உதவிச் செயலாளராகப் பணியாற்றுகின்றார்.

## வி. ஏ. கந்தையா சிலை நிறுவ முயற்சி

[வேலணை]

ஊர்காவற்றுறை முன்னுள் பாராளுமன்ற உறுப்பினரும் தமிழரசுக் கட்சியின் முக்கிய பிரமுகருமாகவிருந்த அமரர் வி. ஏ. கந்தையாவின் ஞாபகார்த்தமாக சிலை ஒன்று நிறுவப்பட உள்ளது.

இதற்கென அமைப்புக்குழு வொன்று வெகு விரைவில் தெரிவு செய்யப்படவிருக்கின்றது. [இ]

(5ம் கலத் தொடர்ச்சி)

கின்றன. பாடசாலைகளில் இடமில்லாவிட்டால் ஏன் இந்த ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்கவேண்டும்? என்று தொழிற்சங்கங்கள் கேட்டுள்ளன.

### கொழும்பு மேற்குத் தொகுதி

கொழும்பு மேற்குத்தொகுதி இடைத்தேர்தலுக்கான நியமனப்பத்திரங்கள் நாளை மறுதினம் புதியநகரமண்டபத்தில் ஏற்றுக்கொள்ளப்படும். ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, ஒருவரை இத் தொகுதியில் நிறுத்தமுடிவுசெய்துவிட்ட போதிலும் நேற்றுவரை அபேட்சகர் பற்றி இறுதி முடிவு எடுக்கப்படவில்லை. ஐக்கியதேசியக்கட்சி தனது அபேட்சகரை இன்று தேர்ந்தெடுக்கும். லங்காசமசமாஜ கட்சி சார்பில் திரு. பேர்னுட் சொய்ஸா போட்டியிடுவார்.

## சின்னஞ்சிறு செய்திகள்

### ஒரு நபரிடம் 11 கூப்பன்கள்!

ஹந்தெஸ்ஸ எனுமிடத்தைச் சேர்ந்த வி. எம். அமரசிறி எனும் பெண், தம்வசம் சட்டவிரோதமான முறையில் பதினெரு கூப்பன் புத்தகங்களை வைத்திருந்த குற்றத்துக்காக கண்டி மாஜிஸ்திரேட் நூறு ரூபா அபராதம் விதித்துள்ளார். இக் கூப்பன் 'கண்டுபிடிப்பு' கண்டி உணவுக் கட்டுப்பாட்டதிகாரியினுல் மேற்கொள்ளப்பட்டது.

### நடிகர் திருமணம்

சிங்களத்திரை உலகின் முன்னணி நடிகர்களில் ஒருவரான விஜயகுமாரதுங்கவுக்கும் முன்னுள் பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் புதல்வி சந்திரிகாவுக்கும் கடந்த திங்கட்கிழமை திருமணம் நடைபெற்றது. திரு. குமாரதுங்க கடந்த பொதுத் தேர்தலில் கட்டான் தொகுதியில் சுதந்திரக்கட்சி சார்பாக போட்டியிட்டு தோல்விகண்டவர்.

### தேவை தேன்!

பல்லேகல்ல ஆயுர்வேத ஆஸ்பத்திரிக்கு அவசரமாக தேன் தேவைப்படுகிறது. ஆயுர்வேத கமிஷனர் இதுசம்பந்தமாக மொத்தவியாபாரிகளிடமிருந்து கேள்வி ஒப்பந்தம் கோரியுள்ளார்.

### சுவீப் சீட்டிழுப்பு

652-வது இலக்க தேசிய சுவீப் மாத்தளையிலுள்ள அலுவிகார விளையாட்டரங்கில் வெள்ளிக்கிழமை இழுக்கப்படும்.

### "அநீதி கிடைக்காது"

பல்கலைக்கழக அனுமதி விஷயத்தில் எந்த ஒரு மாணவனுக்கும் அநீதி இழைக்கப்பட மாட்டாது என்று கல்விஅமைச்சின் காரியதரிசி திரு. ஆர். எம். பி. பி. தலநாயக்க உறுதியளித்துள்ளார்.

### 10,000 பேருக்கு வேலைவாய்ப்பு

பெலியத்தையில் 'ஆரம்பமாகும் மகாவலி அபிவிருத்தி வேலைத் திட்டத்தின் கீழ், அடுத்த ஓரிரு மாதங்களில் பத்தாயிரம் பேருக்கு வேலை வழங்கப்படும்.

### பாவனையாளருக்கு சட்டப்பாதுகாப்பு!

கொள்ளைலாபம் மற்றும் மோசடி வர்த்தகர்களிடமிருந்து பாவனையாளர்களைப் பாதுகாக்கக்கூடிய 'பாவனையாளர் பாதுகாப்புச்சட்ட' மொன்றைக்கொண்டுவர வர்த்தக அமைச்சு உத்தேசித்துள்ளது. இப்புதிய நகல் சட்டத்தின் கீழ் உள்நாட்டு வர்த்தக ஆணையாளர் ஒருவர் நியமிக்கப்படுவார்.

### தொழிற்சங்கவாதி இலங்கை வந்தார்

தொழிற்சங்கங்களின் உலக சம்மேளனச் செயலாளர் திரு. மகேந்திரசென் இலங்கைவந்துள்ளார். இவர், இங்குள்ள பல்வேறு தொழிற்சங்கங்களின் தலைவர்களையும் சந்தித்து பல விஷயங்கள் குறித்தும் ஆலோசனை நடத்துவார்.

### பாடசாலைதேடும் ஆசிரியர்கள்

கடந்த அரசாங்கத்தினுல் பயிற்றப்பட்ட ஏராளமான ஆசிரியர்கள், பாடசாலைகள் இல்லாமல் அலைவதாகதொழிற்சங்க வட்டாரங்கள் தெரிவிக்

[4ம் கலம் பார்க்க]

# லோகசபையிலும் மொழிப்பிரச்னை!

புதுடில்லி, பெப். 22 இந்திய லோகசபையில் நேற்று ரயில்வே மந்திரி பேராசிரியர் மதுதண்டவதே ரயில்வே பட்ஜட்டை ஆங்கிலத்தில் வாசித்தபோது இரு ஜனதாகட்சி எம். பிக்கள் குறுக்கிட்டு 'பட்ஜட்டை' ஹிந்தி மொழியில் வாசிக்குமாறு கேட்டுக்கொண்டனர்.

அப்போது இவ்விஷயத்தில் தலையிட்ட பிரதமர் திரு.மொராஜிதேசாய் எம். பிக்களின்கோரிக்கைக்குகண்டனம் தெரிவித்தார். [இ]


# அம்புஷ் 25

வெங்காயம்-மிளகாய்

பயிர்களைத் தாக்கும் புளுக்களை

கட்டுப்படுத்த வல்ல

சக்திவாய்ந்த கிருமிநாசினியாகும்.

4000 கன்றுகளுக்கு போதுமான!

2 அவுன்ஸ்(50ML) அம்புஷ்

கிருமிநாசினியின் விலை:
ரூபா 35-40 சதம் மட்டுமே;

மேலதிக விபரங்கட்கு:

த ரோரு லிமிட்டெட்,

32, கஸ்தூரியார் வீதி,

யாழ்ப்பாணம்.

தொலைபேசி இல: 7651



**Regal** Jaffna Daily 4-45, 7-00 & 9-30 p.m.
Jean Tierre Leaue in
**GIRL IS A GUN**
Color Action

From: 25-2-78
MICHAEL CAINE
in
**The Romantic English Woman**
(Color)

**சாந்தி** (யாழ். நகர்) போன் 7642.
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
பஷிராஜாவின்
**மரகதம்** சிவாஜி — பத்மினி நடித்த (புதிய பிரதி)
24.2.78 நிதியுதவிக்காட்சி பி. ப. 2.30 மட்டும்
"நிச்சய தாம்பூலம்"
சனி, ஞாயிறு (25, 26-2-78) காலை 8-30 மணிக்கு மட்டும்
**BLACK MOUNTAIN**

**மனோஹரா** (யாழ் நகர்) தினசரி 4 காட்சிகள்
ஏ. வி. எம். ராஜன், ஜெயலலிதா, நாகேஸ
**அனாதை ஆனந்தன்** (கலர்— புதியபிரதி)

**ஸ்ரீதர்** தினசரி 4 காட்சிகள் (யாழ்ப்பாணம்)
[இன்று மட்டும்]
**இன்ஸ்பெக்டர் மனைவி**
நாளை முதல் ஜெமினி, பத்மினி, ராதா நடித்த **சித்தி**

**50-வது** வெற்றி நாளை நோக்கி
**ராணி** (யாழ்.நகர்) தினசரி 4 காட்சிகள்
வி. பி. கணேஷன் — சுபாஷினி ராம்தாஸ் — ஜெனிட்டா நடித்த
**நான் உங்கள் தோழன்**
26- திகதி சகல காட்சிகளிலும் நான் உங்கள் தோழன், கலைஞர்கள் மேடையில் தோன்றுவார்கள்

**வின்ஸர்** யாழ்ப்பாணம் தினசரி 4 காட்சிகள்
கமலஹாசன் ரஜனிகாந்த்
எம்.எஸ்.விஸ்வநாத் ஸ்ரீதேவி-ஓம். விஜய.
**மூன்று முடிச்சு**
திரை கதை வசனம், டைரக்ஷன், கே. பாலசந்தர்

**ராஜா** தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
[யாழ்ப்பாணம்]
ஜெய்சங்கர்-கே. ஆர். விஜயா-சேர-விஜயகுமார் நடித்த
**மேயர் மீனாட்சி**

இரு தினங்கள் மட்டும்
**வெலிங்டன்** (யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள்
கல்யாணகுமார், தேவிகா நடித்த
**நெஞ்சம் மறப்பதில்லை**
[புதிய பிரதி]

கொட்டகை நிறைந்த காட்சியுடன் நடைபெறுகிறது
**லிடோ** போன் 7693
(யாழ்.நகர்) முத்துராமன், சிவகுமார், சுஜாதா நடித்த
**உறவு சொல்ல ஒருவன்**

## மாடுகளுக்கு நோய்

[வேலணை]

தீவுப்பகுதியில் மாடுகளுக்கு நோய் பரவியுள்ளதால் ஏராளமான மாடுகள் இந்நோயினால் இறந்துவருகின்றன. இந்த நோயைக் கட்டுப்படுத்த சம்பந்தப்பட்ட வைத்திய அதிகாரிகள் நடவடிக்கைகளை எடுக்கத் தவறியதினால் இந்த நோய் பெருமளவில் பரவிவருகிறது. (இ)

• • •

## வடமாகாண விவசாயப் பெருவிழா

[யாழ்ப்பாணம்]

இம்முறை வட மாகாண வானொலி விவசாயப் போட்டியும் விவசாயப் பெருவிழாவும் அடுத்தமாதம் 17 ம் 18 ம் தேதிகளில் வேலணை மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளன.

இவ்விழாவில் விவசாயகருத்தரங்கு, விவசாய அறிவுப் போட்டி விவசாயக்கருவிகண்காட்சி உயர்ரக விளைவு விதைப்பொருள் மலர் வெளியீடு ஆகியவை இடம்பெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மலரில் வெளியாகக் கூடிய பயனுள்ள ஆங்கிலம், தமிழ் கட்டுரைகளை அனுப்பி உதவுமாறு விவசாய அறிஞர்களையும் விவசாயமாணவர்களையும் விழாக்குழுத்தலைவரும் தீவுப்பகுதி விவசாய போதனாசிரியருமான திரு. எஸ். சிவக்கொழுந்துகேட்டுள்ளார். (கெ)

—

## வானொலியின்..

[3ம் பக்கத் தொடர்ச்சி]

கோவ்ள சன்சோனி ஆணைக் குழுவின் விசாரணைகளை மக்கள் பரவலாக நன்கு தெரிந்து கொள்ளும்படி செய்ய வேண்டும். இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் இது விஷயத்தில் தனது மௌனத்தை கலைக்குமா? அல்லது தகவல் ஒலிபரப்பு அமைச்சராவது அவர்களது மேற்படி மௌனத்தை கலைக்க முன் வருவரா? பாரதூரமான மேற்படி இருட்டடிப்புக் குறித்து தேசியப் பேரவை உறுப்பினர்களாவது கவனம் செலுத்த வேண்டுகிறோம்.

ரி. எஸ். லோகநாதன்
சா. ஆ. தருமரத்தினம்
யாழ்ப்பாணம்

**புலோலி சினிமாஸ்**
(பருத்தித்துறை)
தினசரி 4-30, 7-00, 9-30,
**Last Granade**

**RIO** [போன்: 7607] Daily 4 Shows
(Jaffna) Richard Harrison
in
**Killers Are Challenged**
(Extended by popular Demand)

**வெஸ்லி**
(மானிப்பாய்)
தினசரி: 6-30, 9-30
சனி, ஞாயிறு: 2-30,
சிவாஜி — பத்மபிரியா
**வைரநெஞ்சம்**

**நாகம்ஸ்**
[சுன்னாகம்]
தினசரி: 6-45, 10-00
ஜெய்சங்கர் நடித்த
**துணிவே துணை**

# குடிக்கு முற்றுப்புள்ளி வைத்தது நஞ்சு

## 60 வயதில் பரிதாபமரணம்

[கரணவாய்]

இருந்த பொருளையெல்லாம் விற்றுக் குடித்து வந்த வயோதிபர் ஒருவர் இறுதியில் தமது மனைவி மக்களைத் துரத்தி விட்டு குடியிருந்த வீட்டையும் விற்றுக் குடித்துமுடித்தபின் நஞ்சிடம் தஞ்சம் புகுந்து கொண்டாராம்.

வல்வெட்டித்துறையன் செம்பாடு என்னுமிடத்தைச் சேர்ந்த சிதம்பரப்பிள்ளை கணபதிப்பிள்ளை [வயது 60] என்பவரே இவ்வாறு தற்கொலை செய்துகொண்டவராவார். இவரின் மரணம் தொடர்பாக உடுப்பிட்டி திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. எம். வி. புவேந்திரன் விசாரணை நடத்தினர். வல்வெட்டித்துறைப் பொலிசார் சாட்சிகளை ஆஜர் செய்தனர்.

இறந்தவரின் மூத்த மகள் கே. நவரத்தினம் சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

இறந்த தகப்பனர் இருந்த பொருளையெல்லாம் குடிவகைகளுக்கே செலவழித்து வந்தார். கடந்த தைப்பொங்கலன்று நன்ருகக் குடித்து விட்டு வந்து எங்களை வீட்டை விட்டு வெளியேற்றினர். நானும் தாயாரும் சகோதரர்களும் மாமியார் வீட்டுக்குச் சென்று தங்கினேம் பின்பு அச்சுவேலியில் வாடகை வீட்டில் குடியிருந்தோம். அப்போது தகப்பனர் எமது வீட்டையும் விற்றுக் குடித்து வருவதாக அறிந்தோம் சம்பவதினம் வல்வெட்டியிலுள்ள ரியூட்டறி ஒன்றுக்கு ரியூசன் கொடுப்பதற்காக நான் சென்ற போது எனது தகப்பனர் நஞ்சருந்தி விட்டதாக அறிந்தேன்."

இறந்தவரின் மனைவி பொன்னு வல்வெட்டி கிராமசேவகர் திரு. தேவராசா ஆகியோர் சாட்சியமளித்த பின் தற்கொலையெனத் தீர்ப்பளிக்கப்பட்டது. [அ]

## பாடசாலை அதிபர் தற்கொலை

[சங்கானை]

மனவிரக்தியடைந்த ஒருவர் நச்சுத்திராவகம் அருந்தித் தற்கொலை செய்துகொண்டார்.

மாதகல் அமெரிக்கன் தமிழ் கலவன் பாடசாலை அதிபராகக் கடமையாற்றிய ரி. செல்லத்துரை என்பவரே தற்கொலை செய்துகொண்டவராவார்.

இரண்டு பிள்ளைகளின் தந்தையானஇவர் மனநோய்வாய்ப்பட்டு சிகிச்சை பெற்று வந்து, ஓரளவில் சுகம் பெற்று மீண்டும் கல்வி கற்பித்துவந்ததாக விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

சம்பவதினம் இவர் பொலிஸ் அதிபருக்குக் கடிதம் ஒன்றை எழுதிவைத்துவிட்டுத் தமது முயற்சியில் வெற்றிகண்டாராம். அவர் எழுதிய கடிதத்தில், தான் எவருடனும் எந்தவித கோபதாபமும் இல்லையெனவும் தமது தொழிலைச் செவ்வனே நடத்த முடியாத நிலையில் இருப்பதாகவும், தாம் கல்வி கற்பிப்பதால் எதிர்காலச் சந்ததியினரின் வாழ்வு பாழாகுமென்றும், இதற்குத் தமது மனச்சாட்சி இடம் கொடுக்காமையால் தாம் தற்கொலை செய்வதாகவும் குறிப்பிட்டிருந்தாராம்.

மரண விசாரணையின் பின் தற்கொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டது. [அ]

## புனித அன்ரனிஸ் வெற்றி

[திருக்கோணமலை]

திருக்கோணமலை புனித அன்ரனிஸ் கோஷ்டிக்கும், ஒலிம்பிக் கோஷ்டிக்குமிடையில் நடந்த உதைபந்தாட்டப் போட்டியில் புனித அன்ரனிஸ் 3—2 கோல்களால் வெற்றிபெற்றது. திரு. வி. கிருஷ்ணசுவாமி மத்தியஸ்தம் வகித்தார். [இ]

......

## வெற்றி - தோல்வி இல்லை

[கரணவாய்]

யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரிக்கும் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரிக்கும் இடையே நடந்த கிரிக்கெட் போட்டி வெற்றி தோல்வி இன்றி முடிந்தது.

ஹாட்லி முதல் ஆட்டத்தில் 6 விக்கட்டுகளை இழந்து 257 ஓட்டங்களை எடுத்து ஆட்டத்தை நிறுத்திக்கொண்டது. வி. ஜெயராமன் 87 ஓட்டங்களையும் எஸ். சிவபாலரட்ணம் 84 ஓட்டங்களையும் எடுத்தனர்.

சென். ஜோன்ஸ் முதல் ஆட்டத்தில் 7 விக்கட்டுகளை இழந்து 255 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தை நிறுத்திக்கொண்டது. ஆர். சோமசுந்தரம் ஆட்டமிழக்காமல் 100 ஓட்டங்களையும், எல். மகேந்திரா 85 ஓட்டங்களையும் பெற்றனர்.

ஹாட்லி இரண்டாம் ஆட்டத்தில் 6 விக்கட்டுகளை இழந்து 104 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தை நிறுத்திக்கொண்டது. சென். ஜோன்ஸ் இரண்டாம் ஆட்டத்தில் ஆட்ட நேர இறுதிவரை 3 விக்கட்டுகளை இழந்து 50 ஓட்டங்களை எடுத்திருந்தது. [இ]

## நியமனம்

[சங்கானை]

மானிப்பாய் கோவில் பற்று ப. நோ. கூ. சங்கத்தின் புதிய தலைவராக கட்டுடையைச் சேர்ந்தவரும் பயிர் காப்புறுதிச்சபை உத்தியோகத்தருமான திரு. எஸ். சிவகுரு தெரிவு செய்யப்பட்டார்.

## சூசையப்பர் திருநாள் கொண்டாடமுடிவு

[மன்னார்]

அடுத்த மாதம் 19-ந் திகதி மன்னாரில் நடைபெறும் புனித சூசையப்பர் திருநாளை மிகச் சிறப்பாகக் கொண்டாடுவதென மன்னார் பனங்கட்டிக் கோட்டு புனித சூசையப்பர் கழகம் தனது மாதாந்தக் கூட்டத்தில் தீர்மானித்துள்ளது. அத்துடன் மன்னார் மறை மாவட்ட முதல்வர் வண. பிதா பயஸ் அடிகளுடன் தொடர்பு கொண்டு திருநாள் பூசைப்பலியை யாழ் ஆயரைக் கொண்டு ஒப்புக்கொடுப்பதென்றும் காலையில் விளையாட்டுப்போட்டியையும், மாலையில் கலை நிகழ்ச்சியையும் நடத்துவதென்றும் முடிவு செய்துள்ளது. [அ]

## தன்னம்பிக்கை —

[2ம் பக்கத் தொடர்ச்சி]

இராமநாதன் பரிசில்களை வழங்கினர்.

போட்டி ஆரம்பிக்கு முன்னர் பாடசாலையில் புதிதா அமைக்கப்பட்டுள்ள மனையியல் கூடத்தை வித்தியாதிபதி திறந்துவைத்தார்.

நாடாளுமன்ற திறப்பு விழாவில்

# இந்திய ராஷ்டிரபதி சஞ்சீவரெட்டி இந்தியில் பேசமாட்டார்!

## அ. இ. அ. தி. க. குழுவிடம் உறுதி

புதுடில்லி, பெப். 22

இந்திய நாடாளுமன்றக் கூட்டத்தொடரை ஆரம்பித்து வைக்கும்போது இனிமேல் இந்தியில் பேசுவதற்கு ராஷ்டிரபதி சஞ்சீவரெட்டி ஒப்புக்கொண்டிருக்கிறார் என்று கூறப்படுவதை அவர் திட்டவட்டமாக மறுத்துள்ளார்.

ராஷ்டிரபதி சஞ்சீவரெட்டியை சந்தித்துப்பேசிய அ. இ. அ. தி. மு. கழக நாடாளுமன்றக் குழுவினர் மேற்படி தகவலை வெளியிட்டுள்ளனர்.

இந்திய நாடாளுமன்றக் கூட்டத்தொடரை ஆரம்பித்துவைத்து ராஷ்டிரபதி ஆங்கிலத்துல் உரை நிகழ்த்துவதை வடநாட்டைச் சர்ந்த இந்தி பிரதிநிதிகள் எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்துவந்திருக்கிறார்கள்.

இதனைத் தவிர்க்க இனிமேல் ராஷ்டிரபதி சஞ்சீவரெட்டி இந்தியில்பேச ஒப்புக்கொண்டிருக்கிறார் என்று கூறப்பட்டது.

இதுதொடர்பாக இந்தி பேசாத மாநிலங்களைச் சேர்ந்த நாடாளுமன்றப் பிரதிநிதிகள் சுமார் 20 பேர் ஒரு மகஜரை இந்திய ராஷ்டிரபதியிடம் சமர்ப்பித்துள்ளார்கள். இந்த மகஜரைக் கையளித்த குழுவில் அ. இ. அ. தி. மு கழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் திரு. சோமசுந்தரம், பால பழனூர் ஆதியவர்களும் கலந்துகொண்டனர்.

இவர்களிடம் பேசிய இந்திய குடியரசுத் தலைவர் திரு சஞ்சீவரெட்டி ஆங்கிலம் கடந்த காலத்தில் இந்திய மக்களை ஒற்றுமைப்படுத்தும் மொழியாக இருந்துவந்துள்ளது அதனை நீக்குவது நாட்டுக்கு நன்மையாக இருக்காது என்று குறிப்பிட்டுள்ளார்

தாம் இந்தியில் பேச சம்மதித்திருப்பதாகக் கூறப்படும் வரை அவர் திட்டவட்டமாக மறுத்ததாக அந்தக்குழுவினர் தெரிவித்துள்ளனர்.

தமிழ்நாடு பட்ஜட்டில்

## 'புரட்சியைக் காணோம் வரட்சிதான் இருக்கிறது'

### தி. மு. க, விமர்சனம்

சென்னை, பெப்.22

தமிழ்நாடு அரசின் 1978—79ம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்டம் இப்பொழுது தமிழ்நாடு சட்டப்பேரவையிலும், மேலவையிலும் ஏககாலத்தில் விவாதிக்கப்பட்டு வருகின்றன.

இதுவரை காலமும் மாலை நேரங்களிலேயே நடைபெற்று வந்த மேலவைக்கூட்டம்இன்று முதல் காலையில் நடைபெறுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சட்டப்பேரவையில் நிதிநிலை அறிக்கைமீது காலையில் விவாதம் ஆரம்பமானபோது எதிர்க்கட்சியினர் அரசின்வரவு செலவுத் திட்டத்தைக் கடுமையாக விமர்சித்தனர். தி. மு. க. உறுப்பினர் அரங்கநாதன் பேசியபோது நிதிநிலை அறிக்கையில் புரட்சிகாணப்படவில்லை, வரட்சிதான் காணப்படுகிறது என்றார் திரு. ''. உ. சண்முகம் பேசியபோது வரிப்பணத்திலிருந்து ஒருபகுதியை முதலமைச்சர் நிதிக்கு ஒதுக்கியிருப்பது சரியல்லவென்று கூறினர்.

நிவாரணப்பணிகள் மிகவும் தாமதமாக நடைபெற்று வருகின்றனவென்று அவர்கண்டித்தார். போராட்டங்களை தி மு. கழகம் தூண்டிவிடுகின்றது என்று கூறப்படுவதை அவர் மறுத்தார். மத்திய அரசிடம் குவிந்துகிடக்கும் அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்படவேண்டும் என்று அவர் வலியுறுத்தினர்

அ. இ. அ. தி. மு. க. உறுப்பினர் திரு. சுப்பிரமணியம் பேசும் போது விவசாயத்துக்கு அரசு அதிகபணம் ஒதுக்கியிருப்பதை வரவேற்றார்.

### முரசொலி அலையோசை

முரசொலி, அலையோசை பத்திரிகைகள்மீது கொண்டு வரப்பட்டிருந்த உரிமைமீறல் பிரச்னைமீது சபாநாயகர் முனிஆதி தீர்ப்பளிக்கையில் அப்பத்திரிகைகளின் மீதுமேற்கொண்டும் நடவடிக்கை எதுவும் எடுக்கவேண்டியதில்லை என்று தெரிவித்தார்.

## தொண்டன் தர்மலிங்கம்

'தோன்றிற் புகழொடு தோன்றுக' என்பது வள்ளுவர் வாய்மொழி. இம்மொழிக்கு இலக்கணமாகத் தோன்றியவர் சமூகத் தொண்டன் தர்மலிங்கம்.

பல்வளமும் பல்கிப் பெருகிய நீர்வேலிக் கிராம முன்னேற்றத்தில் முக்கிய பங்கு கொண்டவர் சமூகத் தொண்டன் தர்மலிங்கம் என்றால் மிகையாகாது.

நீர்வேலியில் வாழ்ந்த கைத்தொழிலாளர்கள் தமது தொழிலைச் செவ்வனே செய்யப் போதிய பணவசதியின்றிக் கஷ்டப்படுவதை உணர்ந்த சமூகத் தொண்டன் தர்மலிங்கம் 1938-ம் ஆண்டில் காமாட்சியம்பாள் ஐக்கிய நாணய சங்கத்தை ஸ்தாபித்து சிறப்புற கண்ணியமாக நடாத்தி வந்ததைக் கண்ட அரசினர் மேற்படி ஸ்தாபனத்தை 1939-ம் ஆண்டு பதிவு செய்து மேலும் வளர்ச்சிபெற ஊக்கமளித்தனர். கைத்தொழிலாளர்களுக்கு மேலும் போதிய தொழில் வாய்ப்பும் நன்மதிப்பும் பெற்றுக் கொடுக்க வேண்டுமென விருப்பி திக்கற்றுத் திரிந்த தொழிலாளரை ஒன்று கூட்டி ஐக்கியப் படுத்தி காமாட்சியம்பாள் ஐக்கிய கைத்தொழிற்சங்கம்என்ற பெயரில் ஓர் தொழிற் சங்கத்தை 1947ம் ஆண்டு ஸ்தாபித்தார். நாட்டின் வளர்ச்சிக்கு உதவும் ஓர் களஞ்சியமாக இன்று அது மிளர்கிறது. நீர்வேலிக் கிராமத்தின் வளர்ச்சிக்கு அன்னார் ஆற்றிய தொண்டுகள் ஏராளம்

இப்பெரியாரை நினைவு கூர்ந்து அவரின் ஞாபகார்த்தமாக அவர் வளர்த்த ஸ்தாபனங்களை வளர்ப்பதோடு அவரின் ஞாபகார்த்த தினத்தை இன்று கொண்டாடுவது நாம் அவருக்கு செய்யும் நன்றிக் கடைப்பாடாகும்.

-எம் கே எஸ்

## ரயில் விபத்து இருவர் பலி

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் மின்நிலையத்துக் கருகில் ரயிலில்மோதுண்டு பலியான இரு இளைஞர்களின மரணம் தொடர்பாக சுன்னாகம் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு எஸ் தாமோதரம்பிள்ளை புலன்விசாரணை நடத்திவருகின்றார்.

ரயிலில்மோதுண்டு மாணமான ஒருவருக்கு 20 வயதும மற்றவருக்கு 22 வயது மிருக்கலாம் என்று கருதப்படுகின்றது ஒருவர் பெயர் கதிரமலை என்றும் இவர் திருக்கோணமலை வாசியென்றும் தெரிகிறது

மற்றவர் யார் என்று தெரியவில்லை இன்று மரண விசாரணை நடைபெறும்.



யாழ். நுண்கலை மன்றத்தின் ஆதரவில் எதிர்வரும் சனிக்கிழமை மாலை வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவிருக்கும் பரத நாட்டிய நிகழ்ச்சியிற் கலந்து கொள்ளும் செல்வி கண்ணம்மா சுந்தசாமியின் தோற்றம்.

## தேர்தலின்பின்—

[1ம் பக்கத் தொடர்ச்சி]

குறிப்பிட்டார்.

திரு. பீட்டர் கெனமன் தொடர்ந்து பேசுகையில், முதலாளி வர்க்கம் இந்த நாட்டில் வலுப்படுத்தும் ஜனநாயகமே கடந்த 7 மாத காலத்தில் இந்த அரசினால் வலுப்படுத்தப்பட்டு வருகின்றன. இதுதான் விசித்திரமான ஜனநாயகம், கடந்த அரசாங்கம் விட்ட சில தவறுகளினால் தான் சோஷலிசக்கொள்கைகளுக்கு இந்த நிலை ஏற்பட்டு விட்டது ஆனால் பொதுத் தேர்தலில் நினைக்க முடியாத வாக்குறுதிகளையெல்லாம் மக்கள் முன்வைத்த ஐக்கிய தேசியக்கட்சி, தமிழர் விடுதலை கூட்டணிபோன்ற முதலாளித்துவ இயக்கங்களே இன்று மக்களுக்குக்கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாத நிலையில் திண்டாடுகின்றன.

### சுரண்டலுக்கு வழிவகுக்கிறது

தர்மராட்சியம் அமைப்போம், தர்மஆட்சிபுரிகிறோம் என்று கூறும் ஐ. தே. கட்சி இன்று நாட்டை அன்னிய ஏகாதிபத்திய சுரண்டலுக்கு வழிவகுப்பதுடன் எமது பொருளாதாரத்தை நாசப்படுத்தவும் திட்டமிட்டுள்ளது. இந்த அரசை நாம் எப்படி நம்பமுடியும்! முதலாளிகளுக்குக் கொடுத்த வாக்குறுதிகளைமட்டும் இன்றைய அரசு துரிதமாக நிறைவேற்றமுயல்கிறது. மக்களுக்குக்கொடுத்த வாக்குறுதிகள் காற்றில் பறக்க விடப்பட்டன. எட்டு ரூத்தல் உணவு தருவதாக கூறியவர்கள் ஏழைகளின் கூப்பனிலும் கையைவைத்ததுமன்றி, சீனியின் விலையையும் உயர்த்தினர் வேலையற்ற சகலருக்கும் ஜொப்காட் மூலம் வேலை வழங்குவதாகக் கூறினர்கள். 7 மாதகாகியும் வேலைவாய்ப்புக்கு சரியான திட்டம் வகுக்கப்படவில்லை.

### கலவரத்தை ஏற்படுத்தினர்

தேர்தல் முடிவடைந்ததும் ஐக்கிய தேசியக்கட்சிக்கு எதிராக வாக்களித்த மக்களுக்கு எதிராக கலவரத்தை ஏற்படுத்தினர். கொள்ளைகள் நடந்தன. இதைத்தொடர்ந்து நாட்டில் இனக்கலவரத்தை வலுவடையச் செய்தனர் இதனால் நாட்டில் உள்ள சாதாரணமக்களே பாதிக்கப்பட்டனர். இது தான் ஐ. தே. கட்சியின் தர்ம ஆட்சியா? என்று கேட்டார்.

இந்த நேரத்தில் கூட்டத்தில் சலசலப்பு அதிகரிக்கத் தொடங்கியது.

## யாழ். நகரில் நேற்றுமாலை...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பட்டு அரைமணிநேரம் இக் குழப்பம் நீடித்தபோதும் மின்சாரம் தடைசெய்யப்பட்டவுடன் சனக்கூட்டம் கலைந்து சென்றது.

குழப்பம் நடந்துகொண்டிருந்தபோது குழப்பம் விளைவித்த இளைஞர்கள் மேடையிலிருந்த சோடாவைக் குடித்த வண்ணம் கூக்குரலிட்டனர்.

கூட்டத்தில் நிதிசேர்ப்பதற்காக வைக்கப்பட்டிருந்த உண்டியல்கள் எடுத்து வீசப்பட்டன.

### கேள்விக் கணைகள்

முன்னாள் செனட்டரும் சமசமாஜக்கட்சியின் வடபிரதேசப் பிரமுகருமான திரு. பி நாகலிங்கம் தலைமையில்நடந்த இக்கூட்டத்தில் ஒரு சில உள்ளூர் பிரமுகர்கள் பேசிமுடிந்து முன்னாள் அமைச்சரும் கம்யூனிஸ்ட் கட்சியின் செயலாளருமான திரு. பீட்டர் கெனமன் பேசிக்கொண்டிருக்கும் போது மேடையின் கிழக்குப்புறமாக நின்றசிலர் கேள்விக்கணைகளைத் தொடுத்தனர். பிட்டர்ஆணித்தரமாக உரத்த குரலில் பதில் கொடுத்துத் தமது பேச்சைத் தொடர்ந்த போதும்கூட குழப்பக்காரர்கள், கேள்விகளை அடுக்கடுக்காகத் தொடர்ந்தனர். கேள்விகளுக்கு பீட்டர் பதில் கொடுத்த போது 'நாங்கள் அரிசியில் கைவைக்கவில்லை, மக்களின் வயிற்றில் கை வைக்கவில்லை. இலங்கையின் நாணய மாற்றில் மோசடி செய்யவில்லை, இனக்கலவரத்திற்கு தூபமிடவில்லை, கலவரகாரரை எதிர்த்து நடவடிக்கை எடுத்தோம்' என்றவாறு பதில் அளித்து தமது பேச்சைத் தொடர முயன்றபோதும் கூட்டத்தில் தொடர்ந்து பேச முடியாதநிலை ஏற்பட்டது.

கூட்டத்திற்குத் தலைமை தாங்கிய திரு. பி. நாகலிங்கம் அமைதியை நிலைநாட்ட மன்ருட்டமான முறையில்வேண்டுகோள் விடுத்தும் கூட்டத்தில் அமைதி ஏற்படவில்லை.

### இதுதான் ஜனநாயகமா?

இதுதான் ஜனநாயகமா, தர்மராட்சியமாஎன்று மேடையில் நின்றவாறே பீட்டர் கேட்டார். அப்போதும் கூட்டத்திலிருந்து கற்கள் வீசப்பட்டன.

இந்த நிலையில் மேடைக்குப் பின்னால் நின்ற சமசமாஜத் தலைவர்கள் காரில் ஏறிச் சென்ற போது மின்சாரம் அணைந்ததுடன் கற்களும்வீசப்பட்டன. தொண்டர்களது பாதுகாப்புடன் திரு. பீட்டர் கெனமன் காரில் கொண்டு செல்லப்பட்டார்.

[வண் - நிரு]

## ஆந்திராவில்!...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

லமைச்சருமான திரு. எம். ஜீ. இராமச்சந்திரன்கூறியுள்ளார்.

ஆந்திர மாநிலத்தில் திருப்பதியில் ஒரு கூட்டத்தில் பேசுகையில் அவர் இக்கருத்தை வெளியிட்டார்.

இப்பத்திரிகை "ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை கோவில் வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1978-ம்ஆண்டு பெப்ரவரி மாதம் 23 ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu Post Box No. 49, Jaffna. Telegram Eelanaadu Telephone 389 Registered as a Newspaper in Srilanka